**டிசம்பர் - 25**

**"பயப்படாதிருங்கள், இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." - லூக் 2.10,11.**

நம்முடைய பிரிய இரட்சகருடைய பிறந்தநாளைக் கொண்டாட இது சரியான நாள் என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆனால் அந்நாள் கிட்டத்தட்ட அக்டோபர் முதலாம் தேதியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இருந்தபோதிலும், அவர் தன்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவிக்காததினாலே, அவ்வளவு பெரிய முக்கியமான சம்பவத்தை எந்நாளில் கொண்டாட வேண்டுமென்பது முக்கியமானதல்ல. பொதுவாகக் கொண்டாடப்படுகிற இந்நாளில் யாருடைய இருதயத்தில் தேவன் சார்பாகவும், இரட்சகர் சார்பாகவும் அன்பும், உயர்வாக மதிக்கும் மனோபாவமும் இருக்கிறதோ அவர்களோடு நாமும் தகுந்த விதமாக சேர்ந்து கொள்ளலாம். வருஷத்தின் இச்சமயத்தில் நினைவூட்டும் பொருள்களை ஒருவருக்கொருவர் கொடுக்கும் பழக்கம் விஷேசமாக பொருத்தமானதாக இருக்கிறதென்று நமக்குத் தோன்றுகிறது. நன்மையான எந்த ஈவையும் கொடுக்கிறவர் தேவன். அவர் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். நாமும் அவரிடமிருந்துத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டே இருக்கிறோம். ஆனால் அவர் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவுகளிலெல்லாம் நமக்கு மிகவும் முக்கியமானதொன்று, நம்முடைய இரட்சகராவதற்காகத் தேவன் கொடுத்த தமது குமாரனின் ஈவு. -
**Z 03, 457 (R 3289)**

எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தி அநேகக் காரியங்களைக் கொண்ட ஆசீர்வாதங்களை வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. அவையாவன, பாவ மன்னிப்பும் அதன் பலனாய் மரித்த எல்லோரும் எழுப்பப்படுதல் சத்தியத்தின் பிசகில்லாத அறிவை மனுப்புத்திரருக்குக் கொடுத்தல், அவர்களைப் பாவத்திற்கும் தப்பான உபதேசங்களுக்கும் சாதகமாயிராத நிலைமையிலும், சத்தியத்திற்கும் நீதிக்கும் சாதகமாயிருக்கிற நிலைமையிலே வைப்பது, கிறிஸ்து சார்பாக ஒரு அனுகூலமான செல்வாக்கை எல்லோர் மேலும் இயங்கச் செய்வது கர்த்தருக்கு முன்பாக எல்லோருடைய நாவும் அவரைக் கர்த்தரென்று அறிக்கை பண்ணுவது, எல்லோருக்கும் பரிசுத்த ஆவியை அருளுவது எல்லோருக்கும் அந்த பரிசுத்த வழியில் நடக்க சிலாக்கியங்களைக் கொடுத்தலுமாகும். மனுக்குலத்துக்குக் கொடுக்கப்போகிற ஆசீர்வாதங்கள் இவைகளே என்று அந்த ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கை "அந்த சந்ததிக்கு" உறுதியளிக்கிறது. இந்த எல்லா ஆசிர்வாதங்களின் அஸ்திவாரமாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பே அந்த மீட்கும் பொருளின் கிரயம், அதாவது, ஒரு பூரண மானிட ஜீவி இருந்திருக்க வேண்டும். ஆகையால், கர்த்தரும் கிறிஸ்துவுமாயிருக்க, அவருடைய மானிடப் பிறப்பு நேரிட வேண்டியதாயிருந்தது. அது நேரிட்ட உடனே அதை ஒரு ஆரம்ப சம்பவமாகத் தேவதூதன் வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடியவனாயிருந்தான். அப்பொழுது அவன் பெத்லகேமின் குழந்தையின் பிறப்பில் வேர்கொண்டிருந்தது. அதன் பாக்கியமுள்ள வளர்ச்சியைக் குறித்தும், இழந்து போனதைத் திரும்ப மனுஷருக்குக் கொடுத்தலில் பலன் கொடுக்கிற அதன் கனியைக் குறித்தும் சொன்னான். **- P 30, 184.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 12.3, சங் 22.27-29, ஏசா 9.6, 29.18,24, 35.5,6,10, லூக் 2.30-32, 34, யோவா 1.9, 12.32, ரோம 14.9, பிலி 2.9-11.**

**கோபுர வாசிப்பு : Z 15, 376 (R 3700).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் சுவிஷேசம் எனக்கு நற்செய்தியாயிருந்ததா? ஏன்? எப்படி? அது என் நடத்தையை எவ்வாறு தூண்டியது?**